| | | |
|---|---|---|
| சாட்சி : PW3<br>சேகர், த/பெ சுந்தரம் | அ.வ.எண்.55/2016 | 17.04.2026 |

**குறுக்கு விசாரணை**

1. அ.வ.எண்.58/2005 வழக்கில் நான் 2ம் பிரதிவாதி, பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி என்றால் சரிதான். மருதமுத்து தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருந்து வாடகை கொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. மருதமுத்து தாவா சொத்திற்கு வீட்டு வரி செலுத்தியதன் மூலம் தான் வாடகை கொடுத்ததை அ.வ.எண்.58/2005 வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.58/2005 வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

2. மருதமுத்து தரப்பினர் தாவா சொத்திற்கு சொத்து வரி செலுத்தியதன் மூலம் வாடகை செலுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மருதமுத்து தரப்பில் வாடகை செலுத்தியுள்ளார்கள் என்றாலும், நான் அதனை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெளியூரில் இருந்ததால் தாவா சொத்தை பார்த்துக்கொள்ள மருதமுத்துவிடம் சொல்லியிருந்தேன். மருதமுத்து தரப்பினருக்கு தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 24.04.2026 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**

**சேகர்**

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.